Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 120 உள்ளூர் - 30.04.2026 வியாழன் விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 55 * Issue 120 வெளியூர் - 01.05.2026 வெள்ளி Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

மே எப்படி இருக்கும்- உங்க ராசியை சொல்லுங்க..!

விமானப்படை 47 காலியிடங்கள்!

மே 4-ல் பல சர்ப்ரைஸ் காத்திருக்கு..!!

மே 1 முதல் என்னென்ன மாறப்போகுது?

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்: Exit Poll முடிவுகளை விட்டு தள்ளுங்க!! மே 4-ல் பல சர்ப்பிரைஸ் காத்திருக்கு..!!

சென்னை, ஏப். 30–

தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் கடந்த 23ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த வாக்குகள் வரும் 4ஆம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இந்த முறை தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தவெக, நாம் தமிழர் என 4 முனை போட்டி நிலவுகிறது. முதலமைச்சர் ஸ்டாலின், அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சீமான், விஜய் என நான்கு முதலமைச்சர் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்த தேர்தல் முடிவுகள் பல சர்ப்பிரைஸ்களை தரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சூழலில் தேர்தலுக்கு பிந்தையை கருத்து கணிப்பு முடிவுகள் நேற்று மாலை வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில்




ஆட்சி அமைக்க 118 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்ற நிலையில், பல்வேறு நிறுவனங்களின் தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் குழப்பத்தையே ஏற்படுத்தியுள்ளன.

தேர்தல் முடிவுகள் , தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகளோடு ஒத்துப் போகுமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இந்த தேர்தலில் பெரும்பாலான குடும்பங்களில் முதல் தலைமுறை வாக்காளர்கள், இளைஞர்கள் வாக்கு யாருக்கு சென்றது , குடும்பத் தலைவிகளின் வாக்கு யாருக்கு சென்றது என்பது தான் முடிவினை தீர்மானிக்க போகும் காரணிகளாகவே இருக்கின்றன.

இவை திமுகவிற்கும் அதிமுகவிற்கும் சென்றதா அல்லது விஜய்க்கு சென்றதா என்பது மே நான்காம் தேதி அன்று தான் தெரியவரும். பெரும்பாலான சமயங்களில் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகளும் உண்மையான தேர்தல் முடிவுகளும் ஒத்துப் போவது கிடையாது. ஏனெனில் மக்கள் எப்போதுமே ஆட்சியில் இருப்பவர்களுக்கும் ஆட்சிக்கு வர ஆர்வம் காட்டுபவர்களுக்கும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தருவார்கள். அந்த அதிர்ச்சியும் ஆச்சரியமும் என்ன என்பது மே 4ஆம் தேதி தான் முழுமையாக தெரியவரும். தேர்தல் கருத்துக்கணிப்பு முடிவுகளை பொறுத்தவரை கடந்த 2021 ஆம் ஆண்டு பெரும்பாலான கருத்துக்கணிப்புகள் திமுக கூட்டணி வெற்றி பெறும் என்று அறிவித்தன, அது ஏறக்குறைய அப்படியே நடந்தது. ஆனால் 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி வெல்லும் என பெரும்பாலான கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியானாலும் அதிமுக தான் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தது. அந்த வகையில் பார்க்கும்போது இந்த தேர்தல் முடிவுகளும் பல்வேறு சர்ப்ரைஸ் நிறைந்ததாகவே இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

# "கேம் ஜேஞ்சர்"

# "எதிரிகளுக்கு மாரடைப்பு வந்துவிடும்!" புதிய ஆயுதத்தை கையில் எடுத்த ஈரான்..

## அமெரிக்காவுக்கு நேரடி மிரட்டல்..!!

அமெரிக்கா, ஏப். 30–

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை பின்தங்கிய நிலையில், எதிரிகளுக்கு மாரடைப்பை ஏற்படுத்து அளவுக்கு தாக்கம் கொண்ட ஒரு ஆயுதத்தை விரைவில் வெளியிடப்போவதாக தெஹ்ரான் எச்சரித்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், ஈரான் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஷஹ்ராம் இரானி, மேற்கத்திய நாடுகளுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார். எதிரிகளை நிலைகுலையச் செய்யும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட புதிய இரகசிய ஆயுத அமைப்பை தெஹ்ரான் மிக விரைவில் களமிறக்க உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இந்த ஆயுதத்தின் தொழில்நுட்ப விவரங்களை வெளியிடாத போதிலும், அது போர்க்களத்தில் சமநிலையை மாற்றக்கூடிய "கேம் ஜேஞ்சர்" ஆக இருக்கும் எனவும் கூறினார்.



தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல் குறித்து பேசுகையில், ஈரான் பல வெற்றிகரமான பதிலடி தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக இரானி தெரிவித்தார். குறிப்பாக, அமெரிக்காவின் விமானம் தாங்கி கப்பலான யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதனால் அப்பகுதியில் அமெரிக்காவின் வான்வழி நடவடிக்கைகள் தற்காலிகமாக பாதிக்கப்பட்டதாகவும் கூறினார்.

மேலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடர்புடைய இலக்குகள் மீது 100–க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். உலகின் முக்கிய எண்ணெய் போக்குவரத்து வழிகளில் ஒன்றான ஹார்மூஸ் தற்போது முழுமையாக ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், அந்த வழியாக செல்லும் கப்பல்களுக்கு ஈரானிய அதிகாரிகளின் கடுமையான அனுமதி அவசியம் எனவும் அவர் கூறினார். எதிரிப் படைகள் ஈரானின் கடற்பரப்பிற்கு நெருங்கினால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார். மேலும், ஈரானிய எண்ணெய் மற்றும் வர்த்தகக் கப்பல்களை கைப்பற்றிய அமெரிக்க நடவடிக்கையை "கடற்கொள்ளை" என விமர்சித்த அவர், கப்பல் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை தடுத்து வைத்திருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.


அதே நேரத்தில், அமெரிக்க தலைமையிலான கடற்படை முற்றுகையை மீறியும் சில ஈரானிய கப்பல்கள் தொடர்ந்து இயங்கி வருவதாகவும் தெரிவித்தார். எந்தவொரு மோதலும் தீவிரமடைந்தால், வலுவான பதிலடி கொடுக்க ஈரான் ஆயுதப்படைகள் முழு தயார் நிலையில் உள்ளதாகவும், "பின்வாங்காத" கொள்கையில் உறுதியாக இருப்பதாகவும் இரானி எச்சரித்துள்ளார்.

# நடப்பு நிதியாண்டில் எண்ணெய் நிறுவனங்கள் ரூ.80 ஆயிரம் கோடி நஷ்டத்துக்கு உள்ளாகும் என கணிப்பு!

புதுடெல்லி, ஏப். 30–

கச்சா எண்ணெய் விலை உயர்வை ஒப்பிடும்போது சில்லறை எரிபொருள் விலைகள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால், எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் பெட்ரோலை லிட்டருக்கு ரூ.14 மற்றும் டீசலை ரூ.18 இழப்பில் விற்பனை செய்து வருகின்றன.

மேலும், வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ப் பிரச்சினைக்கு பிந்தைய அதிகரித்த கச்சா எண்ணெய் விலைகள் காரணமாக, நடப்பு நிதியாண்டில் சமையல் கியாஸ் விற்பனையில் ரூ.80,000 கோடி அளவிற்கு இழப்பு ஏற்படும் எனவும், உர மானியம் ரூ.2.25 லட்சம் கோடி வரை உயரக்கூடும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பிரபல தனியார் நிதி



மதிப்பீடு நிறுவனமான ஐக்ரா (இந்தியா கடன் மதிப்பீடு ஏஜென்சி) வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஐக்ரா நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் பிரசாந்த் வசிஷ்ட் கூறுகையில், "கச்சா எண்ணெய் விலை உயர்விலும் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட வாகன எரிபொருட்களின் சில்லறை விலை நிலையாக வைத்திருப்பது. எண்ணெய் நிறுவனங்களின் லாபத்திறனை பாதிக்கிறது. கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 120 அமெரிக்க டாலருக்கு விற்பனை ஆகும் நிலையில் பெட்ரோல் மற்றும் டீசலில் முறையே லிட்டருக்கு ரூ.14 மற்றும் ரூ.18 அளவில் எண்ணெய் நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படும்," என்றார். ஐக்ரா மதிப்பீட்டுப்படி, தற்போதைய நிலை தொடர்ந்தால் நடப்பு நிதியாண்டில் எண்ணெய் நிறுவனங்களுக்கான மொத்த இழப்பீடு தொகை ரூ.80 ஆயிரம் கோடியை எட்டக்கூடும். அதேபோல், உர மானியம் ரூ.2.25 லட்சம் கோடியாக உயரக்கூடும். இது பட்ஜெட்டில் நிர்ணயிக்கப்பட்ட ரூ.1.71 லட்சம் கோடியை விட அதிகமாகும்.

உரத் துறையிலும் செலவுகள் கடுமையாக உயர்ந்துள்ளன. சல்பர், அமோனியா மற்றும் இயற்கை எரிவாயு விலைகள் உயர்ந்ததால், 2026 ஏப்ரலில் யூரியா விலை உயர்ந்துள்ளது. மொத்தத்தில், எரிசக்தி மற்றும் உள்ளீட்டு செலவுகள் பல துறைகளின் லாபத்தை குறைத்து, சில நிறுவனங்களின் கடன் நிலையை பலவீனப்படுத்தக்கூடும் என ஐக்ரா தெரிவித்துள்ளது.

# கிரெடிட் கார்டு பயன்படுத்துறீங்களா? புதிய விதியை கொண்டு வந்த ஆர்.பி.ஐ.

புதுடெல்லி, ஏப். 30–

இந்திய ரிசர்வ் வங்கி கிரெடிட் கார்டு விதிகளில் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. புதிய விதிகளின் படி கிரெடிட் கார்டு பில் செலுத்தத் தவறுபவர்களுக்கு, கடைசி தேதிக்கு பிறகு 3 நாட்கள் வரை அவகாசம் வழங்கப்படும். இதன்மூலம் கடைசித் தேதி முடிந்தும் 3 நாட்கள் வரை அபராதம் இன்றி பணம் செலுத்த அவகாசம் அளிக்கப்படும். இடைப்பட்ட காலக்கட்டத்தில் சிபில் ஸ்கோரும் பாதிக்கப்படாது. இந்த புதிய சலுகை ஏப்ரல் 1, 2027 முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்த 3 நாட்களையும் கடந்து தாமதம் செய்யும்போது மட்டுமே உங்கள் கடன் வரலாறு எதிர்மறையாகப் பாதிக்கப்படும். சிபில் ஸ்கோர் குறைந்தால், எதிர்காலத்தில் வீடு அல்லது வாகனக் கடன் பெறுவது கடினமாகிவிடும். எனவே, தொழில்நுட்பக் கோளாறுகளோ அல்லது எதிர்பாராத பண நெருக்கடியோ ஏற்படும் சூழலில், இந்த 3 நாள் அவகாசம் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் கிரெடிட் கார்டு பயனர்களுக்கு மகிழ்ச்சி அளிக்க கூடியதாக இந்த அறிவிப்பு அமைந்துள்ளது.

# கோகினூர் வைரத்தை இந்தியாவிடம் ஒப்படைக்க சார்லஸிடம் கோருவேன்- நியூயார்க் மேயர் மம்தானி!

நியூயார்க், ஏப். 30–

அமெரிக்காவிற்கு அரசுமுறைப் பயணமாக மூன்றாம் சார்லஸ் சென்றுள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட தலைவர்களை மன்னர் சார்லஸ் சந்தித்து பேசினார். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை வலுப்படுத்தும் விதமாக மன்னர் சார்லஸின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

பிரிட்டன் மன்னர் சார்லஸை அமெரிக்காவின் முக்கிய பிரமுகர்களும் சந்தித்து வருகிறார்கள். அந்த வகையில், நியூயார்க் நகர மேயர் சோஹ்ரன் மம்தானியும் சார்லஸை சந்திக்க இருந்தார். இந்தச்



சந்திப்புக்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய மம்தானி, "பிரிட்டன் மன்னர் 3 ஆம் சார்லஸைச் சந்திக்கும்போது வரலாற்றுச் சிறப்புமிக்க கோஹினூர் வைரத்தை இந்தியாவிடம் திருப்பித் தருமாறு அவரிடம் வலியுறுத்துவேன்," என்று கூறினார். எனினும், மன்னர் 3ஆம் சார்லஸ் உடனான சந்திப்பின் போது வைரத்தைப் பற்றிய பேச்சு நடத்தப்பட்டதா என்பது குறித்து தெளிவான தகவல் ஏதுமில்லை. இது தொடர்பாக கருத்து தெரிவிக்க பக்கிங்ஹாம் அரண்மனையும் மறுத்துவிட்டது. மம்தானி இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் ஆவார்.

கோஹினூர் வைரம் என்பது உலகின் மிகப்பெரிய மற்றும் பழமையான வைரங்களில் ஒன்றாகும். கொல்லூர் சுரங்கம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இந்த 105.6 காரட் வைரம், தற்போது பிரிட்டிஷ் ராணியின் கிரீடத்தில் பதிக்கப்பட்டு லண்டன் கோபுரம்வில் உள்ளது. முகலாயர்கள், பாரசீகர்கள், ஆப்கானியர்கள் மற்றும் சீக்கியர்களின் கை மாறி, 1849–ல் பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது. இந்த வைரத்தை இந்தியாவிடம் திருப்பி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# அழகர் கோவிலில் இருந்து புறப்பட்ட அழகருக்கு எதிர்சேவை!



மதுரை. ஏப். 30–

வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வுக்காக அழகர் கோவிலில் இருந்து புறப்பட்ட அழகருக்கு மதுரை மூன்றுமாவடியில் எதிர்சேவை. மக்கள் கள்ளழகரை சர்க்கரை தீபம் ஏற்றி வழிபட்டனர்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 30.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 17-ம் தேதி

# இந்தியர்கள் மத்தியில் உருவாகி இருக்கும் 9 மணி டிரெண்ட்!



இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் வெயில் சுட்டெரிக்க தொடங்கி இருக்கிறது. தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களிலும் வழக்கத்தை விட இந்த ஆண்டு தற்போது வெயில் வாட்டி வதைக்கிறது. காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரை மக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத அளவிற்கு வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை வெயிலின் தாக்கத்தை உணர தொடங்கி இருக்கிறார்கள் என்பதால் மக்கள் நீர்ச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உட்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். இந்த ஆண்டு வழக்கத்தை விட வெயிலும் வெப்ப அலையும் அதிகமாக இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதால் இயன்ற அளவு மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதை தவிர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.


இந்த வெயில் காலத்தில் இந்தியாவில் ஒரு புதிய ட்ரெண்ட் உருவாகி இருப்பது தற்போது தெரியவந்திருக்கிறது. இந்த கோடை காலத்தில் இந்தியர்களின் ஷாப்பிங் பிஹேவியர் பெரிய அளவில் மாற்றம் கண்டு இருக்கிறதாம். குறிப்பாக இந்தியாவின் முன்னணி நகரங்களில் இரவு 9 மணிக்கு மேல் ஐஸ்கிரீம் ஆர்டர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதாக ஸ்விக்கி நிறுவனம் தெரிவித்திருக்கிறது. ஸிவிக்கியின் இன்ஸ்டாமார்ட், செப்டோ, பிளிங்கிட் போன்ற குயிக் காமர்ஸ் செயலிகள் மூலம் நமக்கு தேவையான பொருட்களை ஆர்டர் செய்த 10 முதல் 20 நிமிடங்களுக்குள் டெலிவரி செய்து விடுகின்றன. பால், மளிகை பொருள் உள்ளிட்டவை சேர்த்து கோடை காலத்திற்கு ஏற்ப தயிர் ,ஐஸ்கிரீம், பழ வகைகள் உள்ளிட்டவற்றையும் நாம் இந்த செயலிகள் வாயிலாக ஆர்டர் செய்து கொள்ள முடியும். அந்த வகையில் இந்த ஆண்டு சம்மரில் இன்ஸ்டாமார்ட்டில் என்னென்ன பொருட்கள் அதிகமாக ஆர்டர் செய்யப்பட்டன என்ற விவரங்களை ஸ்விக்கி வெளியிட்டு இருக்கிறது.

அதில் தேசிய அளவில் இரவு 9 மணிக்கு ஐஸ்கிரீம் ஆர்டர்கள் அதிகரித்திருப்பதாக கூறியிருக்கிறது. குறிப்பாக மாலை ஆறு மணியில் இருந்து இரவு 9 மணி வரை ஐஸ் கிரீம் ஆர்டர்கள் அதிகமாக வருகின்றன அதிலும் 9 மணி அளவில் வழக்கத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக ஆர்டர்கள் வருவதாகவும் வார இறுதி நாட்களில் இவை இன்னும் அதிகரிப்பதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது

தங்களுடைய இன்ஸ்டாமார்ட் செயலியில் மாம்பழம், குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம் வகைகள் ஆர்டர் செய்யப்படும் அளவு மார்ச் மாதத்தில் இருந்து ஒவ்வொரு வாரமும் 300 சதவீதம் அதிகரித்து இருப்பதாக கூறுகிறது. மாலை வேளையில் ஐஸ் கிரீம் ஆர்டர்கள் அதிகரித்திருப்பதாகவும். ஒட்டு மொத்தமாகவும் நாள் முழுவதும் தயிர் ஆர்டர்கள் அதிகம் வருவதாகவும் கூறுகிறது. இந்த கோடை காலத்தில் இன்ஸ்டாமார்ட்டில் அதிகமாக ஆர்டர் செய்யப்பட்ட பொருளாக முதலிடத்தில் தயிர் இருப்பதாக தெரிவித்திருக்கிறது. இரண்டாவது இடத்தில் சாஃப் ட்ரிங்குகள் அதாவது குளிர்பானங்களும் மூன்றாவது இடத்தில் ஐஸ்கிரீமும் இருக்கிறதாம். அடுத்ததாக தர்பூசணி மற்றும் கிர்ணி பழங்கள் அதிகமாக ஆர்டர் செய்யப்பட்டு இருப்பதாகவும் அவற்றுக்கான டிமாண்ட் அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்து இருக்கிறது.

நாட்டின் பிரதான நகரங்களில் எல்லாமே இரவு 9 மணிக்கு ஐஸ்ரீம் ஆர்டர் செய்யப்படும் பேட்டர்ன் ஒரே மாதிரியாக இருக்கிறதாம். குறிப்பாக ஒரு குடும்பத்தினர் உண்ணக்கூடிய அளவிலான ஐஸ்கிரீம் டப்பாக்கள் விற்பனை அதிகரித்து இருக்கிறதாம். அதிகபட்சமாக பெங்களூருவில் தான் ஐஸ்கிரீம்கள் ஆர்டர் வந்திருப்பதாக கூறுகிறது. இன்ஸ்டாமார்ட்டில் ஆர்டர் செய்யப்பட்ட மொத்த ஐஸ்கிரீம்களில் 14 சதவீத ஆர்டர்கள் பெங்களூரு நகரிலிருந்து தான் வந்திருக்கிறதாம். அதேபோல சென்னை ,மும்பை , ஹைதராபாத் , டெல்லி கொல்கத்தா நகரங்களிலும் இதே நிலைமைதான் காணப்படுகிறது என கூறி இருக்கிறது. நாட்டின் பிரதான நகரங்கள் மட்டும் இல்லாமல் நாகர்கோயில் ,மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் இருநூறு சதவீதத்திற்கும் மேலாக ஆடர்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ஸ்விக்கி கூறுகிறது.

## லடாக்கில் மிதமான நிலநடுக்கம்..!!



ஜம்முகாஷ்மீர், ஏப். 30–

லடாக்கில் மிதமான நிலநடுக்கம் பதிவானதாக தேசிய நிலநடுக்க வியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. லே பகுதியில் மையமாகக் கொண்டு பதிவான இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 4.1 ஆகப் பதிவாகியுள்ளது.

## சென்னை மெட்ரோ - MRTS இணைப்புக்கான இறுதிக்கட்ட நகர்வு!




சென்னை, ஏப். 30–

MRTS பறக்கும் ரயில் சேவையை கையகப்படுத்த சென்னை மெட்ரோ சமர்ப்பித்த, இறுதி வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரயில்வே வாரியத்தின் ஒப்புதலுக்கு தெற்கு ரயில்வே அனுப்பிள்ளது. ரயில்வே வாரியத்தின் ஒப்புதல் கிடைத்துவிட்டால், ஜூன் மாதம் ஒப்பந்தம் கையெழுத்தாகி, கையகப்படுத்தும் பணி உடனடியாக தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தாய்மார்களே கவனிங்க.! 3-வது பிரசவ விடுப்பில் அரசை அதிரவைத்த சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு.!!



சென்னை, ஏப். 30–

மகப்பேறு காலத்தின் போது பணியில் இருக்கும் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படுவது வழக்கம். தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு 6 மாத காலமாக இருக்கிறது. ஆனால் அரசு வேலையில் இருக்கும் பெண்களுக்கு, 2 குழந்தைகள் வரை மகப்பேறு விடுப்பு ஓராண்டு காலமாக உள்ளது. தமிழக அரசின் அரசாணைப் படி, மூன்றாவது குழந்தைக்கு 12 வாரம் மகப்பேறு விடுப்பு அளிக்கப்படும். இந்நிலையில் 3–வது குழந்தைக்கும் ஓராண்டு கால மகப்பேறு விடுப்பு அளிக்க வேண்டும் என சென்னை உயர் நீதி மன்றம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், முதல் இரண்டு பிரசவத்தின் போது அனுபவிக்கும் வலியைத் தான் மூன்றாவது பிரசவத்தின் போதும் பெண்கள் அனுபவிக்கிறார்கள். ஆகவே ஓராண்டு மகப்பேறு விடுப்பு அளிப்பது தான் நியாயம் என மாவட்ட முதன்மை நீதிமன்றத்திற்கு, சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

## விஜய் - சங்கீதா விவாகரத்து வழக்கில் திடீர் திருப்பம்!



சென்னை, ஏப். 30–

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஜய், சினிமாவில் இருந்து விலகி அரசியல் கட்சி தொடங்கி சட்டசபை தேர்தலை சந்தித்துள்ள நிலையில், அவரது மனைவி சங்கீதா விவாகரத்து கோரி செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்

வரும் ஜூன் 15–ந் தேதி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வர உள்ள நிலையில், அன்றைய தினம் விஜய் சங்கீதா இருவரும் செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் நேரில் ஆதரவாகி, தனது தரப்பு விளக்கத்தை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே, விஜய் சங்கீதா விவாகரத்து வழக்கை விசாரித்து வந்த செங்கல்பட்டு மாவட்ட குடும்ப நல நீதிமன்ற நீதிபதி சசிகலா பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக ஏற்கனவே செங்கல்பட்டு குடும்ப நல நீதிபதியாக இருந்த சுஜாதா, மீண்டும் அதே பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பெரியகுளம் அருகே மஞ்சளாறு கரையோர மக்களுக்கு எச்சரிக்கை!

தேனி, ஏப். 30–

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மஞ்சளாறு கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குடிநீர் தேவைக்காக மஞ்சளாறு அணையில் இருந்து 200 கனஅடி வீதம் நீர் திறக்கப்பட்டுள்ளதால் மக்கள் ஆற்றை கடக்கவோ, குளிக்கவோ வேண்டாம் என பொதுப்பணித்துறை எச்சரித்துள்ளனர்.

## தமிழ்நாட்டிற்கு 2.5 டிஎம்சி தண்ணீர் திறக்க காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் உத்தரவு!

டெல்லி, ஏப். 30–

டெல்லியில் நடைபெற்ற 50வது காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் கூட்டத்தை தொடர்ந்து, தமிழ்நாட்டிற்கு 2.5 டிஎம்சி தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு காவிரி ஆணையம் ஆணையிட்டுள்ளது.


## ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் ஜாமினில் வெளிவந்த அஸ்வத்தாமன் வெளிநாடு தப்ப முயன்றபோது கைது!

சென்னை, ஏப். 30–

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் ஜாமினில் வெளிவந்த அஸ்வத்தாமன் வெளிநாடு தப்ப முயன்றபோது கைது செய்யப்பட்டார். பெங்களூருவில் இருந்து தாய்லாந்துக்கு விமானத்தில் தப்பிச் செல்ல முயன்றபோது அஸ்வத்தாமன் கைது செய்யப்பட்டார்.





## மே மாதம் எப்படி இருக்கும்- உங்க ராசியை சொல்லுங்க..!




ஒவ்வொரு மாதமும் கிரகங்களின் நிலைகளைப் பொறுத்து பலன்கள் வேறுபடும். அந்த வகையில் 2026 ஆம் ஆண்டின் ஐந்தாவது மாதமான மே மாதத்தில்நிகழும் கிரக பெயர்ச்சிகளால், பல மங்களகரமான மற்றும் சுப யோகங்கள் உருவாகவுள்ளன. இந்த யோகங்களால் மே மாதமானது மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிக்காரர்களின் வாழ்க்கையில் எதிர்பாராத பல மாற்றங்களைக் கொண்டு வரப்போகிறது. உங்களுக்கு 2026 ஆம் ஆண்டின் மே மாதம் எப்படி இருக்கப் போகிறது என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளதா? கீழே 12 ராசிக்காரர்களும் மே மாதத்தில் எந்த மாதிரியான பலன்களைப் பெறப் போகிறார்கள் என மே மாத ராசிப்பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் ராசிக்கு 2026 மே மாதம் எப்படி இருக்கும் என்பதை தொடர்ந்து படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

### மேஷம்

மேஷ ராசிக்காரர்களே! மே மாதத்தைப் பொறுத்தவரை, தனிப்பட்ட வாழ்க்கை சிறப்பாக இருக்கும். மாதத்தின் தொடக்கத்தில் செவ்வாய் தனது சொந்த ராசிக்கு செல்வதால், மாத தொடக்கம் ஆற்றலும், நம்பிக்கையும் நிறைந்ததாக இருக்கும். மனதில் இருந்த பயம் நீங்கும். புது தெளிவு பிறக்கும். புதிதாக ஏதாவது செய்ய ஆவல் எழும். தொழிலில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். ஆரோக்கியம் முன்பை விட சிறப்பாக இருக்கும். பழைய பிரச்சனைகள் தீரும். இருப்பினும் கோபத்தை சற்று கட்டுப்படுத்த வேண்டும்.

### ரிஷபம்

ரிஷப ராசிக்காரர்களே! மே மாதம் உங்களுக்கு மங்களகரமானதாக இருக்கும். நிலுவையில் உள்ள பல வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். புதிய வருமான ஆதாரங்கள் உருவாகும். சிலருக்கு அலுவலகத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். உங்களின் கடமைகளை சிறப்பாக செய்வீர்கள். இருந்தாலும், அவ்வப்போது ஒருவித குழப்பம் எழும். வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும். பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப வாழ்க்கை நன்றாக இருக்கும்.

### மிதுனம்

மிதுன ராசிக்காரர்களே! மே மாத தொடக்கத்தில் புதன் அஸ்தமனமாகி பலவீனமாகி மன குழப்பத்தை ஏற்படுத்தினாலும், குரு பகவானும், சுக்கிரனும் இம்மாதத்தில் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். மாணவர்கள் படிப்பில் சிறந்து செயல்படுவார்கள். ஆன்மீக பயணங்களை மேற்கொள்ள நேரிடும். குடும்பத்தினருடன் நல்ல நேரத்தை செலவிடும் வாய்ப்பு கிடைக்கும். உடல் சோர்வால் சிரமப்படக்கூடும் என்பதால் ஆரோக்கியத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும்.

### கடகம்

கடக ராசிக்காரர்களே! மே மாதம் உங்களுக்கு சிறப்பான மாதமாக இருக்கும். இம்மாதத்தில் தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படலாம். வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புக்களும் கிடைக்கலாம். நீண்ட கால பிரச்சனைகள் குறையும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய வருமான ஆதாரங்கள் உருவாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். நிதி நிலைமை வலுவடையும். முதலீடுகளில் இருந்து நல்ல லாபம் கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

### சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களே! மே மாதத்தில் உங்களுக்கு திடீர் நிதி ஆதாயங்கள் கிடைப்பதோடு, வேலையில் வெற்றியையும் காண்பீர்கள். பணிபுரிபவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்புள்ளது. சமூகத்தில் அந்தஸ்து உயரும். தன்னம்பிக்கை வலுவடையும். நல்ல நிதி ஆதாயங்கள் கிடைத்தாலும், செலவுகளையும் அதிகம் சந்திக்க நேரிடும். வீட்டிற்காக சில செலவுகளை செய்ய வேண்டியிருக்கும். குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

### கன்னி

கன்னி ராசிக்காரர்களே! மே மாதத்தில் புதுமண தம்பதிகள் நல்ல செய்திகளைப் பெறலாம். வேலையில் மெதுவாக முன்னேற்றத்தைக் காணக்கூடும். பணிபுரிபவர்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். இருப்பினும் குரு மற்றும் சுக்கிரனின் சுப நிலைகளால் சாதகமான பலன்களையும் பெறக்கூடும். நிதி நிலை வழக்கத்தை விட சிறப்பாக இருக்கும். நிறைய பணத்தை சம்பாதிக்கும் வாய்ப்புக்கள் உடைக்கும். முதலீடுகளை செய்யும் போது கவனமாக இருக்க வேண்டும். இம்மாதத்தில் உங்களுக்கு எதிராக சிலர் செயல்படலாம். ஆரோக்கியத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும்.

### துலாம்

துலாம் ராசிக்காரர்களே! மே மாதம் உங்களுக்கு சிறப்பாக இருக்கும். நிலுவையில் உள்ள வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். சமூகத்தில் நற்பெயர் அதிகரிக்கும். காதல் வாழ்க்கை மேம்படும். புதிய மாற்றங்களைக் காணக்கூடும். மாத தொடக்கம் சற்று மெதுவாக இருந்தாலும், போக போக ஆற்றலும், உற்சாகமும் அதிகரிக்கும். ஆன்மீக பயணங்களை மேற்கொள்வீர்கள். மாணவர்களுக்கு சிறப்பான மாதமாக இருக்கும். நிதி நிலைமை வலுவடையும். புதிய வருமான வழிகள் உருவாகும் வாய்ப்புள்ளது. கூட்டு தொழில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, வயிறு, தோல் அல்லது நரம்பு தொடர்பான பிரச்சனைகளில் கவனமாக இருக்க வேண்டும்.

### விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களே! மே மாதத்தில் சொத்துக்களால் நல்ல பலனைப் பெறுவீர்கள். மறைமுக எதிரிகளிடம் சற்று கவனமாக இருங்கள். வலுமானமும் செலவுகளும் நிலையாக இருக்கும். அதாவது வந்த வேகத்தில் பணம் செலவாகும். நிறைய பயணங்களை மேற்கொள்ள நேரிடும். இதன் மூலம் நிறைய செலவுகள் ஏற்படும். ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும். விபத்து ஏற்படும் வாய்ப்புள்ளதால், வாகனம் ஓட்டும் போது கவனமாக இருக்க வேண்டும். குடும்பத்திற்குள் மனக்கசப்புகள் அல்லது கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது.

### தனுசு

தனுசு ராசிக்காரர்களே! மே மாதத்தில் புதிய வருமான வழிகளை கண்டறிவீர்கள். தனிப்பட்ட வாழ்க்கையில் சற்று கவனமாக இருக்க வேண்டும். நிதி நிலைமை வலுவடையும். நல்ல பண ஆதாயங்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. பயணங்களை மேற்கொள்ளவும் வாய்ப்புள்ளது. மாணவர்கள் தேர்வில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். குடும்பம் மற்றும் குழந்தைகள் தொடர்பான கவலைகள் அதிகரிக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கூட்டாளருடன் சிறுசிறு கருத்து வேறுபாடுகளை சந்திக்க நேரிடலாம். இருப்பினும் நிலைமை கட்டுப்பாட்டில் தான் இருக்கும். பிரச்சனைகள் திடீரென்று வரும் என்பதால், ஆரோக்கியத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும்.

### மகரம்

மகர ராசிக்காரர்களே! மே மாதமானது மிகவும் சாதகமாக இருக்கும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். காதல் வாழ்க்கையில் இனிமை அதிகரிக்கும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உருவாகும். வாழ்வில் நேர்மறையான மாற்றங்களைக் காண்பீர்கள். நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும். ஆனால் இம்மாதத்தில் கோபத்தையும், பிடிவாதத்தையும் தவிர்ப்பது நல்லது. இல்லாவிட்டால் அது உறவுகளில் விரிசலை ஏற்படுத்தும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து திகழ்வார்கள். தொழிலில் சில தடைகளை சந்தித்தாலும், மாத இறுதியில் நிலைமை மேம்படும்.


### கும்பம்

கும்ப ராசிக்காரர்களே! மே மாதத்தில் நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும். முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். படைப்பாற்றல் அதிகரிக்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். திறமைகள் மேம்படும். நிதி நிலை வலுவடையும். மன கவலை நீடித்தாலும், தன்னம்பிக்கையால் அனைத்தையும் திறம்பட சமாளிப்பீர்கள்.

### மீனம்

மீன ராசிக்காரர்களே! மே மாதத்தில் தொழிலில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். காதல் வாழ்க்கை சிறப்பாக இருக்க பொறுமையும், புரிதலும் அவசியம். வீட்டில் சுப காரியங்கள் நடக்கலாம். செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் முழு ஆதரவு கிடைக்கும். பெற்றோரின் வழிகாட்டுதலும் கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும், சேமிக்கவும் முடியும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை வயிறு மற்றும் கால் தொடர்பான பிரச்சனைகளில் கவனமாக இருக்க வேண்டும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### குடிப்பழக்கம் இல்லாதவர்களையும் தாக்கும் கல்லீரல் நோய்.. என்ன காரணம்..?



பல ஆண்டுகளாக, கல்லீரல் நோய் என்பது மது அருந்துதலுடன் நேரடியாக தொடர்புடையதாகவே கருதப்பட்டு வந்தது. ஆனால், சமீபத்திய மருத்துவ ஆய்வுகள் இந்த புரிதல் முழுமையாக சரியானதல்ல என்பதை வெளிப்படுத்துகின்றன. இன்று, மது அருந்தாதவர்களிடமும் கல்லீரல் நோய் அதிகரித்து வருவது மருத்துவ உலகில் புதிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது அதிகமாக காணப்படும் கல்லீரல் நோய்களில் முக்கியமான ஒன்று 'மதுசாரா கொழுப்பு கல்லீரல் நோய்' (NAFLD) ஆகும். இது, மது அருந்தாதவர்களுக்கும் கூட கல்லீரலில் கொழுப்பு சேர்ந்து உருவாகும் நிலையாகும். குறிப்பாக, உடற்பயிற்சி இல்லாமை, நீண்ட நேரம் அமர்ந்து வேலை செய்வது, ஒழுங்கற்ற உணவு பழக்கம், உடல் பருமன் மற்றும் நீரிழிவு போன்ற காரணிகள் இதற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

மருத்துவ நிபுணர்கள் தெரிவிப்பதாவது, இந்த NAFLD நிலை சிலருக்கு 'NASH' எனப்படும் தீவிரமான கல்லீரல் அழற்சி நிலைக்குத் தள்ளப்படலாம். இது தொடர்ந்து நீண்டகாலத்தில் கல்லீரல் இழைநார் வளர்ச்சி (fibrosis), கல்லீரல் செயலிழப்பு மற்றும் புற்றுநோய்க்கும் வழிவகுக்கக்கூடும்.

இந்த நோயின் மிகப்பெரிய சவால் என்னவென்றால், ஆரம்ப கட்டத்தில் எந்தவித தெளிவான அறிகுறிகளும் தெரியாமல் இருப்பதுதான். லேசான சோர்வு, வயிற்று அசௌகரியம் போன்ற சாதாரண அறிகுறிகள் மட்டுமே காணப்படுவதால், பலர் இதை கவனிக்காமல் விடுகின்றனர். மஞ்சள் காமாலை அல்லது உடல் வீக்கம் போன்ற அறிகுறிகள் வெளிப்படும் நேரத்தில், நோய் ஏற்கனவே முன்னேறிய நிலையில் இருக்கும் அபாயம் உள்ளது.

மேலும், மது தவிர, ஹெபடைடிஸ் B மற்றும் C போன்ற வைரஸ் தொற்றுகள், தன்னுடல் தாக்கு நோய்கள் (autoim–mune diseases), மரபணு காரணிகள் மற்றும் சில மருந்துகளின் பக்கவிளைவுகளும் கல்லீரல் நோய்க்கு காரணமாக இருக்கலாம். குறிப்பாக, மருத்துவர் ஆலோசனை இல்லாமல் மருந்துகள் அல்லது மூலிகை பொருட்களை அதிகமாக பயன்படுத்துவது கூட கல்லீரலுக்கு சேதத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்படுகிறது.

ஆனால், நம்பிக்கையளிக்கும் விஷயம் என்னவென்றால், கல்லீரல் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் அதை கட்டுப்படுத்த முடியும். கல்லீரல் செயல்பாட்டு பரிசோதனை (LFT), அல்ட்ராசவுண்ட் போன்ற எளிய பரிசோதனைகள் மூலம் ஆரம்ப கட்டத்திலேயே பிரச்சனைகளை கண்டறிய முடியும். குறிப்பாக, உடல் பருமன், நீரிழிவு அல்லது குடும்ப வரலாறு உள்ளவர்கள் தவறாமல் சோதனை செய்ய வேண்டும் என மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

சிகிச்சை முறையில், வாழ்க்கை முறை மாற்றங்களே முக்கிய பங்காற்றுகின்றன. உடல் எடையை குறைத்தல், தினசரி உடற்பயிற்சி, சத்தான உணவு பழக்கம் போன்றவை கல்லீரல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். வைரஸ் தொற்றுகள் இருந்தால், அவற்றிற்கான சிகிச்சைகள் தற்போது பயனுள்ளதாக கிடைக்கின்றன.

மருத்துவ வல்லுநர்கள் வலியுறுத்துவது என்னவென்றால், "மது குடிக்காததால் பாதுகாப்பாக இருக்கிறோம்" என்ற எண்ணத்தை மக்கள் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான். கல்லீரல் நோய் யாருக்கும் ஏற்படக்கூடியது என்பதால், முன்கூட்டியே பரிசோதனை செய்து, உடல்நலத்தில் விழிப்புணர்வுடன் இருப்பதே பாதுகாப்பான வழியாகும்.

# 9% டிஏ உயர்வு: அடி தூள்!! இந்த மத்திய அரசு ஊழியர்களுக்கு மட்டும் அதிக அகவிலைப்படி!

புதுடெல்லி, ஏப். 30–

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு இது முக்கியமான தருணமாக உள்ளது. 8வது ஊதியக்குழு பற்றிய செய்திகள் ஒவ்வொன்றாக வந்த வண்ணம் உள்ளன. அதே வேளையில், சமீபத்தில் அகவிலைப்படி அதிகரிப்புக்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

**அகவிலைப்படி உயர்வு:**

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான, ஜனவரி முதல் ஜூன் 2026 வரையிலான காலத்திற்கான, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அகவிலைப்படி (Dearness Allowance) / அகவிலை நிவாரண (Dearness Relief) உயர்வை மோடி அரசு சமீபத்தில் அறிவித்தது. 7வது ஊதியக் குழுவின் கட்டமைப்பின் கீழ், இந்த அகவிலைப்படி 2% உயர்த்தப்பட்டு, ஊழியரின் அடிப்படை ஊதியத்தில் 58 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

5வது மற்றும் 6வது ஊதியக்குழுக்கள்:







அகவிலைப்படி பற்றிய விஷயத்தில், பெரிதும் கவனிக்கப்படாமல் போன மற்றொரு முக்கியமான விவரமும் உள்ளது. 5–வது மற்றும் 6–வது ஊதியக் குழுவின் கட்டமைப்புகளின் கீழ் இப்போதும் ஊதியம் அல்லது ஓய்வூதியம் பெறும் ஊழியர்களுக்கான அகவிலைப்படி விகிதங்களையும் மத்திய அரசு திருத்தியமைத்துள்ளது. மேலும், இவர்களின் விஷயத்தில், இந்த உயர்வு கணிசமாக அதிகமாக உள்ளது.

**9% டிஏ உயர்வு:**

நிதி அமைச்சகம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி,

– 6வது ஊதியக் குழுவின் கீழ் வரும் ஊழியர்களுக்கான அகவிலைப்படி 257 சதவீதத்திலிருந்து 262 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

– 5வது ஊதியக் குழுவின் கீழ் வருபவர்களுக்கான அகவிலைப்படி இப்போது 474 சதவீதத்திலிருந்து 483 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

– சதவீத அடிப்படையில் பார்க்கும்போது, இது 6–வது ஊதியக் குழு ஊழியர்களுக்கு 5 சதவீத உயர்வையும், 5–வது ஊதியக் குழுவின் கீழ் வருபவர்களுக்கு 9 சதவீத உயர்வையும் குறிக்கிறது.

– இவை இரண்டும் 7வது ஊதியக் குழுவின் கீழ் வழங்கப்பட்ட 2 சதவீத டிஏ உயர்வை (DA Hike) விட மிக அதிகமாகும்.

**ஊழியர்கள் இன்னும் ஏன் பழைய ஊதியக் குழுக்களின் கீழ் உள்ளனர்?**

இது பலருக்கு உள்ள ஒரு கேள்வியாக உள்ளது. 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் டிசம்பர் 31, 2025 அன்றே முடிவடைந்துவிட்ட நிலையில், சில ஊழியர்கள் ஏன் இன்னும் பழைய ஊதியக் கட்டமைப்புகளின் கீழ் ஊதியம் அல்லது ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்? பல்வேறு வகையான நிறுவனங்களில் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதில்தான் இதற்கான விடை அடங்கியுள்ளது.

அரசுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒரே நேரத்தில் ஊதியத் திருத்தங்களை ஏற்றுக்கொள்வதில்லை. பல தன்னாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மானியம் பெறும் அமைப்புகள் ஆகியவை மத்திய அரசின் ஊதியக் குழுப் பரிந்துரைகளைப் பின்பற்றுவதில் தாமதம் காட்டுகின்றன. சில சமயங்களில் இந்தத் தாமதம் மாதக்கணக்கிலோ அல்லது ஆண்டுகணக்கிலோ கூட நீடிக்கலாம். இத்தகைய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், திருத்தப்பட்ட ஊதிய முறை முறையாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை, பழைய ஊதியக் கட்டமைப்புகளின் கீழேயே தொடர்ந்து ஊதியம் பெறக்கூடும்.

**ஓய்வூதியத்திலும் தாக்கம் ஏற்படும்:**

இதில் ஓய்வூதியம் தொடர்பான சிக்கல்களும் எழக்கூடும். சில ஓய்வுபெற்ற ஊழியர்கள், குறிப்பாக 2006–க்கு முன்னரோ அல்லது 2016–க்கு முன்னரோ ஓய்வுபெற்றவர்கள், ஓய்வூதியத் திருத்தங்களில் முரண்பாடுகளைச் சந்தித்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில், ஓய்வூதியக் கணக்கீட்டு சூத்திரத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் அல்லது குறைந்தபட்ச ஓய்வூதிய விதிகள் தொடர்பான சிக்கல்கள் சர்ச்சைகளுக்கு வழிவகுத்துள்ளன.

இவற்றுள் சில வழக்குகள் இன்னும் நீதிமன்ற விசாரணையில் உள்ளன. இதன் விளைவாக, இந்த ஓய்வூதியதாரர்கள் பழைய ஊதியக் குழுவின் கட்டமைப்புகளின் கீழேயே தொடர்ந்து நீடிக்கின்றனர்.

மற்றொரு காரணி, வேலைவாய்ப்பின் தன்மையாகும். வழக்கமான ஊதியப் பட்டியலின் கீழ் வராத ஒப்பந்த மற்றும் தற்காலிகப் பணியாளர்கள், பெரும்பாலும் முழுமையான ஊதியக் குழு சலுகைகளைப் பெறுவதில்லை. இது, பழைய ஊதியக் கட்டமைப்புகளுடனான தொடர் பிணைப்பிற்கும் வழிவகுக்கக்கூடும்.

**யாருக்கு அதிக டிஏ உயர்வு?**

பரந்த அளவில் பார்த்தால், தன்னாட்சி அமைப்புகளின் ஊழியர்கள், மானியம் பெறும் நிறுவனங்களின் பணியாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் தீர்வுக்காகக் காத்திருக்கும் நிலையில் உள்ள சில ஓய்வூதியதாரர்கள் ஆகியோர் இந்த வகைகளின் கீழ் வருகிறார்கள். இக்குழுக்கள் ஒப்பீட்டளவில் சிறியவை என்றாலும் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவாகத் திகழ்கின்றன. இவை இன்றும் முந்தைய ஊதியக் குழு கட்டமைப்புகளின்படியே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**ஊதியக் குழுக்கள் வாரியான அகவிலைப்படி திருத்தங்கள்:**

ஜனவரி 1, 2026 முதல் அமலுக்கு வந்துள்ள சமீபத்திய அகவிலைப்படி திருத்தம், மூன்று ஊதியக் கட்டமைப்புகளிலும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது:

7வது ஊதியக் குழு: அகவிலைப்படி 58%–லிருந்து 60% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

6வது ஊதியக் குழு: அகவிலைப்படி 257%–லிருந்து 262% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

5வது ஊதியக் குழு: அகவிலைப்படி 474%–லிருந்து 483% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

7வது ஊதியக் குழுவே இன்றும் பெரும்பான்மையான ஊழியர்களை, சுமார் 50 லட்சம் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் 67 லட்சம் ஓய்வூதியதாரர்களை உள்ளடக்கியுள்ளது.

**அடி எடுத்து வைக்கும் 8–வது ஊதியக்குழு:**

7வது ஊதியக் குழு பரிந்துரைகளின் 10 ஆண்டுகாலப் பதவிக்காலம் டிசம்பர் 2025 இல் நிறைவடைந்திருந்தாலும், 8–வது ஊதியக் குழு அமல்படுத்தப்படும் வரை, அகவிலைப்படி கணக்கீடுகளுக்கு அதன் கட்டமைப்பே தொடர்ந்து பயன்படுத்தப்படும். நீதிபதி ரஞ்சனா தேசாய் அவர்களின் தலைமையில், 8வது ஊதியக் குழு தொடர்பான பணிகளை அரசாங்கம் ஏற்கனவே தொடங்கியுள்ளது.

8வது ஊதியக்குழு அமல்படுத்தப்பட்டதும், தற்போதைய அகவிலைப்படி (DA) அடிப்படை ஊதியத்துடன் இணைக்கப்படும் என்றும் புதிய அமைப்பின் கீழ் அகவிலைப்படி கூறு மீண்டும் பூஜ்ஜிய நிலைக்குக் கொண்டுவரப்படும் என்றும் நம்பப்படுகின்றது. அதுவரை, அகவிலைப்படி ஆண்டுக்கு இருமுறை, அதாவது ஜனவரி முதல் ஜூன் மாதங்களில் தொடர்ந்து திருத்தப்பட்டு வரும். ஜூலை 2026 –க்கான அடுத்த அகவிலைப்படி உயர்வு அக்டோபர் 2026 வாக்கில், பெரும்பாலும் பண்டிகைக் காலத்திற்கு முன்னதாகவே அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கணிசமான சம்பள உயர்வு:**

7–வது ஊதியக் குழுவின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள 2% அகவிலைப்படி உயர்வு சிறியதாகத் தோன்றலாம். ஆனால், இது கணிசமான சம்பள உயர்வுக்கு (Salary Hike) வழிவகுக்கும். பழைய ஊதியக் கட்டமைப்புகளின் கீழ் வரும் ஊழியர்கள் இன்னும் அதிகமான உயர்வைக் காண்கின்றனர்.

மேலும், அமலாக்கக் காலக்கெடுவில் உள்ள வேறுபாடுகள் காரணமாக, பல்வேறு பணியாளர் பிரிவுகளிடையே ஊதிய வேறுபாடுகளும் தொடர்ந்து நிலவி வருகின்றன. 8வது ஊதியக் குழுவின் அமலாக்கத்திற்கான பணிகள் வேகம் பிடித்துவரும் நிலையில், இத்தகைய இடைவெளிகள் படிப்படியாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தற்போதைக்கு, இந்தியாவின் அரசு ஊதிய முறை பழைய மற்றும் புதிய கூறுகளின் கலவையாகவே நீடிக்கிறது.

**பொறுப்புத் துறப்பு:**

இந்த பதிவு, மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படி (DA) திருத்தங்கள் தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் பொதுவில் கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. சமீபத்திய மற்றும் துல்லியமான விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப்பூர்வ தளங்களை அணுக பரிந்துரைக்கப்படுகின்றது.

# வேலை வாய்ப்பு

## விமானப்படை 47 காலியிடங்கள்!

**Indian Air Force Recruitment 2026**

- Vacancy: 47
- Post Name: LDC, Hindi Typist, Driver (Ordinary Grade)
- Qualification: 10th, 12th
- Selection Process: Written Test, Skill Test/ Practical/ Physical Test

நிறுவனத்தின் பெயர்: இந்திய விமானப்படை

அறிவிப்பு எண்: 01/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 47 கீழ்நிலை எழுத்தர் (LDC), இந்தி தட்டச்சு செய்பவர், சிவிலியன் மெக்கானிக்கல் டிரான்ஸ்போர்ட் டிரைவர் (சாதாரண தரம்) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 02.05.2026

கடைசி தேதி: 31.05.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://indianairforce.nic.in/

### நாலுமாவடி பன்னோக்கு மிஷன் மருத்துவமனையில் பிறந்த

# 500-வது குழந்தைக்கு நினைவு பரிசு மோகன் சி லாசரஸ் வழங்கினார்!



குரும்பூர், ஏப். 30–

நாலுமாவடி பன்னோக்கு மிஷன் மருத்துவமனையில் பிறந்த 500வது குழந்தைக்கு இயேசு விடுவிக்கிறார் ஊழிய நிறுவனர் மோகன் சி லாசரஸ் நினைவு பரிசு வழங்கினார்.

நாலுமாவடியில் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் புதுவாழ்வு பன்னோக்கு மிஷின் மருத்துவமனை கடந்த 2022 ஜூலை 7ம் தேதி முதல் பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வருகிறது. குறைந்த கட்டணத்தில் சிறந்த மருத்துவம் அளிக்கப்படுவதால் பல்வேறு பகுதிகளிலிருந்து இங்கு வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். மேலும் இங்கு குறைந்த கட்டணத்தில் பிரசவம் பார்க்கப்படுவதால் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த மக்கள் மட்டுமல்லாது ஸ்ரீவைகுண்டம், சாத்தான்குளம், திசையன்விளை, ஆத்தூர், திருச்செந்தூர் போன்ற பகுதிகளிலிருந்தும் ஏராளமானோர் வந்து பயனடைந்து செல்கின்றனர்.

இந்நிலையில் சாத்தான்குளத்தை சேர்ந்த முத்துப்பாண்டி&ரம்யா தம்பதியினருக்கு இந்த மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது. இந்த மருத்துவமனையில் பிறந்த 500வது குழந்தை என்பதால் இந்த குழந்தைக்கு நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி மருத்துவமனை வளாகத்தில் நடந்தது. இயேசு விடுவிக்கிறார் ஊழிய நிறுவனர் மோகன் சி லாசரஸ் தலைமை வகித்து குழந்தைக்கு தங்க மோதிரமும், பரிசு பொருட்களும் வழங்கி வாழ்த்தினார். முன்னதாக புதுவாழ்வு சங்க செயலாளரும், மருத்துவமனை இயக்குனருமான டாக்டர் அன்புராஜன் வரவேற்றார். மகப்பேறு மருத்துவர் ஜெயசுதா வாழ்த்தி பேசினார்.

இதில் இயேசு விடுவிக்கார் ஊழிய நிர்வாகிகள், புது வாழ்வு பன்னோக்கு மிஷன் மருத்துவமனை டாக்டர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை இயேசு விடுவிக்கிறார் ஊழிய பொது மேலாளர் செல்வக்குமார் தலைமையில் ஊழியர்கள் செய்திருந்தனர்.





இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


# சினிமா துளிகள்..!



## ரோஹன் மெஹ்ராவுடன் மும்பை ஹோட்டல் மீட்டிங் காதல் வதந்தி!



தென்னிந்திய சினிமாவின் நட்சத்திர நாயகியாக வலம் வரும் பூஜா ஹெக்டே, பாலிவுட் நடிகர் ரோஹன் மெஹ்ரா என்பவரை டேட்டிங் செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த சில வருடங்களாகவே நடிகர் ரோஹன் மெஹ்ராவை பூஜா ஹெக்டே அடிக்கடி சந்தித்து பேசி வருவதாக சமூக வலைதளத்தில் கிசுகிசுக்கப்பட்டது. கடந்த ஆண்டு நடைபெற்ற பல முக்கிய நிகழ்வுகளில் இருவரும் ஒன்றாக வலம் வந்தனர். ஆனால் இதுதொடர்பாக வந்த வதந்திகளுக்கு இருவரும் எந்தவிதமான கருத்தோ அல்லது மறுப்போ தெரிவிக்கவில்லை. மும்பை நட்சத்திர ஹோட்டலில் இருவரும் சந்தித்து கொண்ட நிகழ்வு, சினிமா வட்டாரத்தில் மீண்டும் புயலை கிளப்பியுள்ளது. இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள பூஜா ஹெக்டே, தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிட வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார். பாலிவுட்டில் கடந்த 2018ஆம் ஆண்டு வெளியான பஜார் திரைப்படத்தில் சைஃப் அலிகானுடன் இணைந்து நடித்ததன் மூலம், திரையுலகிற்கு ரோஹன் மெஹ்ரா அறிமுகமானார். இதை தொடர்ந்து சஞ்சய் லீலா பன்சாலி இயக்கத்தில் வெளியான பாஜிராவ் மஸ்தானி திரைப்படத்தில், உதவி இயக்குநராக ரோஹன் மெஹ்ரா பணியாற்றியுள்ளார்.

இந்த நிலையில் இருவருக்கும் இடையே வலம் வரும் செய்திகள், நட்பா அல்லது காதலா என்று சமூக வலைதளத்தில் நெட்டிசன்கள் பதிவிட்டு வருகின்றனர்.

# திருச்செந்தூர் கோவிலில் இ.பி.எஸ். குடும்பத்துடன் சாமி தரிசனம்!

திருச்செந்தூர், ஏப். 30–

தமிழக சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை மே 4–ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி குடும்பத்தினர் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் விஸ்வரூப தரிசனம் செய்தனர். மூலவர் சண்முகர் மற்றும் இதர சன்னதிகளில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர் .


# இந்தியா வரும் வியட்நாம் குடியரசுத் தலைவர் - வணிக ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை!

புதுடெல்லி, ஏப். 30–

பிரதமர் மோடியின் அழைப்பின்பேரில் 3 நாள் பயணமாக மே 5ஆம் தேதி இந்தியா வரும் வியட்நாம் குடியரசுத் தலைவர் தோ லாம் பிரதமர் மோடியுடன், வணிகம் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

### ஹெலிகாப்டரில் இருந்து ஏவப்பட்ட

# குறுகிய தூர கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளின் முதல் 'சால்வோ' சோதனை வெற்றி!



டெல்லி, ஏப். 30–

ஹெலிகாப்டரில் இருந்து ஏவப்பட்ட குறுகிய தூர கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளின் (NASM–SR) முதல் 'சால்வோ' சோதனை வெற்றி அடைந்ததாக DRDO அறிவித்துள்ளது. மிகக் குறுகிய நேர இடைவெளியில் 2 ஏவுகணைகள் அடுத்தடுத்து ஏவப்பட்டன. இந்தியாவின் முதல் வான்வழி கப்பல் எதிர்ப்பு 'சால்வே சோதனை இதுவாகும். 55 கி.மீ தூரம் செல்லக்கூடிய இது, ஏவிய பின் இலக்கைத் தானாகத் தேடித் தாக்கும் திறன் கொண்டது.

# லட்சத்தீவில் இருந்து முதல் முறையாக நீர் விமான சேவை விரைவில் அறிமுகம்!




புதுடெல்லி, ஏப். 30–

இந்தியாவில் முதல் வணிக ரீதியிலான நீர் விமான சேவை லட்சத்தீவில் இருந்து தொடங்க உள்ளது. இந்திய பயணிகள் விமானப் போக்குவரத்து, தரை வழியில் மட்டுமல்லாமல் தற்போது நீர் வழியிலும் விமானசேவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக லட்சத் தீவில் இருந்து நீர் விமான சேவை விரைவில் தொடங்கப்பட உள்ளது. 'ஸ்கைஹாப் ஏவியேஷன்' என்ற நிறுவனம் இதற்கான அனுமதியை சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்திடம் இருந்து பெற்றுள்ளது.




## கருத்து கணிப்பு: தலை சுற்றலில் தலைவர்கள்!



சென்னை, ஏப். 30–

தமிழகத்தில் கடந்த 23–ந் தேதி (வியாழக்கிழமை) 17–வது சட்டசபை தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இந்தத் தேர்தலுடன் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள 152 தொகுதிகளுக்கு முதற்கட்ட வாக்குப்பதிவு நடந்த நிலையில், நேற்று (29–ந்தேதி) மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு 2–வது கட்ட வாக்குப்பதிவு நடந்தது.

ஏற்கனவே, புதுச்சேரி, கேரளா, அசாம் ஆகிய மாநிலங்களுக்கு கடந்த 9–ந் தேதி ஒரே கட்டமாக வாக்குப் பதிவுநடந்துமுடிந்திருக்கிறது. இந்த நிலையில், தமிழகம் உள்பட 5 மாநில சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்குகள் மே மாதம் 4–ந் தேதி (திங்கட்கிழமை) எண்ணப்பட இருக்கின்றன.

**தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்குமா?**

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மார்ச் 15–ந் தேதி சமயத்தில் வெளியான கருத்து கணிப்புகளில், தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று தகவல்கள் வெளியாகின. ஆனால், தேர்தல் தேதி நெருங்கும் சமயத்தில் வெளியான கருத்து கணிப்புகளில், அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று கூறப்பட்டன. தமிழக அரசின் உளவுத்துறையும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று அரசுக்கு அறிக்கை கொடுத்ததாக தகவல் வெளியானது.

**தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு**

ஆனால், வாக்குப்பதிவு நாளான 23–ந் தேதி, வாக்களித்தவர்களை வைத்து பார்க்கும்போது, த.வெ.க.வுக்கு அதிக வாக்குகள் பதிவாகியிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்கு வங்காளத்தில் நேற்று 2–வது கட்ட வாக்குப்பதிவு நிறைவடைந்த நிலையில், வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் 5 மாநிலங்களுக்கும் வெளியாகின.

**வெவ்வேறு முடிவுகள்**

இந்த கருத்து கணிப்பு முடிவுகள் வெவ்வேறாக இருந்ததால், அரசியல் தலைவர்கள் தலை சுற்றலில் இருந்து வருகிறார்கள். என்.டி.டி.வி. – பீப்பிள்ஸ் பல்ஸ், மேட்ரிஸ், ரிபபிளிக் பி மார்க், சாணக்கியா ஸ்ட்ராட்டஜிஸ், மும்பை சட்டபஜார், அக்னி, மின்னம்பலம் ஆகிய 7 நிறுவனங்கள், ஆளுங்கட்சியான தி.மு.க.வே மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ளன.

அதே நேரத்தில், வோட் வைப், ஜே.வி.சி. – டைம்ஸ் நவ், சி.என்.என். – நியூஸ் 18 ஆகிய 3 நிறுவனங்கள் அ.தி.மு.க. ஆட்சியை பிடிக்கும் என்று தெரிவித்துள்ளன. ஆனால், இந்தியா டுடே – ஆக்சிஸ் மை இந்தியா தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியை பிடிக்கும் என்று கருத்து கணிப்பு வெளியிட்டுள்ளது.

**தலைவர்களுக்கு தலை சுற்றல்**

இப்படி, தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் வெவ்வேறாக இருப்பதால், "ஆட்சியை பிடிப்போம்" என்ற நம்பிக்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் தலை சுற்றலில் உள்ளனர். ஆனால், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் வெளியானதில், தி.மு.க. முன்னிலையில் இருப்பதால், அக்கட்சி நிர்வாகிகள் "வெற்றி நமதே" என்று நம்பிக்கையுடன் உள்ளனர்.

அதே நேரத்தில், எதிர்க்கட்சியான அ.தி.மு.க. நிர்வாகிகளும், புதிய வரவான த.வெ.க. நிர்வாகிகளும் அதே நம்பிக்கையில் இருப்பதால், மே 4–ந் தேதி தேர்தல் முடிவு எப்படி இருக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பு இப்போதே தமிழக மக்களிடம் இருந்து வருகிறது. தேர்தல் முடிவு வந்த பிறகுதான், எந்த நிறுவனத்தின் கருத்து கணிப்பு உண்மை, எந்த நிறுவனத்தின் கருத்து கணிப்பு பொய் என்பது வெளிச்சத்துக்கு வரும். ஆகையால் தேர்தல் முடிவுகளை எதிர்நோக்கி மக்கள் ஆர்வத்தில் உள்ளனர்.

## த.வெ.க. வேட்பாளர்களுடன் விஜய் ஆலோசனை!



சென்னை, ஏப். 30–

தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாக உள்ள நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் இன்று தனது கட்சி வேட்பாளர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் 23–ம் தேதி நடைபெற்றது. இதில் நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) முதன்முறையாகக் களம் கண்டது. எடப்பாடி தொகுதி வேட்புமனு நிராகரிக்கப்பட்டதைத் தவிர்த்து, மீதமுள்ள 233 தொகுதிகளிலும் அக்கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்நிலையில், சென்னை பனையூரில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் இன்று பிற்பகல் 1 மணிக்கு ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் மட்டுமே இந்தக் கூட்டத்தில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து வேட்பாளர்களும் அந்தந்த வாக்குச்சாவடிகளில் பெறப்பட்ட '17C' ஒரிஜினல் படிவத்தை கட்டாயம் கொண்டு வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

17C என்பது, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் அடங்கிய படிவம் ஆகும். இது தேர்தல் அலுவலர் மூலம் வேட்பாளர்களிடம் வழங்கப்படுகிறது. இந்த படிவம் தேர்தலில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கான முக்கிய ஆவணமாக பார்க்கப்படுகிறது.

## வாக்கு எண்ணும் நாளில் தமிழகம் முழுவதும் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும்: தலைமைச் செயலாளர் உத்தரவு!



சென்னை, ஏப். 30–

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 23–ந் தேதி மிக அமைதியாக நடைபெற்று முடிந்தது. வாக்குப்பதிவு முடிந்தவுடன், அனைத்து ஓட்டுப்பதிவு எந்திரங்களும் அந்தந்த் தொகுதிக்கு உட்பட்ட 62 வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு கொண்டு வரப்பட்டு, வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் அறைகள் பூட்டி 'சீல்' வைக்கப்பட்டன. வாக்கு எண்ணிக்கை 4–ந் தேதி நடைபெறுகிறது.

அன்றைய தினம் மேற்கொள்ளப்பட வேண்டிய பாது காப்பு பணிகள் குறித்து தமிழக தலைமை செயலாளர் சாய்குமார் தலைமையில், சென்னை கோட்டையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் உள்துறை செயலாளர், டி.ஜி.பி. மற்றும் சென்னை, தாம்பரம் போலீஸ் கமிஷனர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் வாக்கு எண்ணிக்கை தினத்தன்று அசம்பாவிதங்கள் நடக்காமல் தவிர்க்க, வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும். தமிழகம் முழுவதும் போலீசார் தீவிர கண்காணிப்பில் இருக்க வேண்டும். விழிப்புடன் இருக்க வேண்டும். வாக்கு எண்ணும் மையங்களில் சி.ஆர்.பி.எப். வீரர்கள் மற்றும் தமிழக காவல்துறையினர் என கூடுதல் போலீசாரை நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

அதோடு, வாக்கு எண்ணும் மையங்களை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் மற்றும் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வருபவர்கள் அனைவரும் மெட்டல் டிடெக்டர் உள்ளிட்ட கருவிகள் மூலம் தீவிரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்க வேண்டும். தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ அடையாள அட்டை இல்லாத எவரையும், எந்தக் காரணத்தைக் கொண் டும் மையத்திற்குள் அனுமதிக் கக்கூடாது. வாக்கு எண் ணிக்கை தொடங்கி, முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்பட்டு, வெற்றிச் சான்றிதழ் வழங்கும் வரை பாதுகாப்பு கெடுபிடிகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள் எவ்விதத் தளர்வும் இன்றி தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

## வங்கதேசத்தில் தட்டம்மை நோய்: இந்தியாவுக்கும் தொற்று பரவும் அபாயம்!



வங்கதேசம், ஏப். 30–

வங்கதேசத்தில் தட்டம்மை நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. இதுவரை தட்டமைக்கு 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தட்டமை நோய் பரவும் தன்மை கொண்டது என்பதால், அண்டை நாடான இந்தியாவிற்கும் தொற்று ஏற்படும் அபாயம் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. 1 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளே இந்நோய் தொற்றுக்கு அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். தடுப்பூசி விகிதம் குறைந்ததே இந்த பரவலுக்கு முக்கிய காரணம் எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தட்டம்மை என்பது மிகவும் வேகமாக பரவும் தீவிர வைரஸ் நோயாகும். இது எல்லா வயதினரையும் பாதிக்கக்கூடும். ஆனால் சிறு குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். உலகளவில் இளம் குழந்தைகள் உயிரிழப்பிற்கு காரணமான முக்கிய நோய்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்த வைரஸ், பாதிக்கப்பட்ட நபரின் மூக்கு, வாய் அல்லது தொண்டையிலிருந்து வெளியேறும் நீர் துளிகள் மூலம் பரவுகிறது. தொற்று ஏற்பட்ட 1014 நாட்களுக்குப் பிறகு அறிகுறிகள் தோன்றும்.

## மே 1 முதல் என்னென்ன மாறப்போகுது?




புதுடெல்லி, ஏப். 30–

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் இந்தியாவில் பல விதிமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அந்த வகையில் மே 1 முதல் அமலுக்கு வரும் புதிய மாற்றங்களை இந்த பதிவில் விரிவாகப் பார்க்கலாம்.

**சிலிண்டர் விலை :**

ஒவ்வொரு மாதமும் ஒன்றாம் தேதியன்று சிலிண்டர் விலை மாறும். சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, எண்ணெய் நிறுவனங்கள் எரிவாயு சிலிண்டர்களின் விலையை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது.

தற்போது சென்னையில் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.928.50 ஆகவும், வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ.2,246.50 ஆகவும் உள்ளது. எனவே மே மாதத்தில் சிலிண்டர் விலை மாற்றப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

ஏனெனில் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றம் மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக, எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பைச் சரிசெய்ய இந்த விலை உயர்வு அவசியமாகக் கருதப்படு கிறது. வரும் மே 4–ம்தேதி தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ₹25 முதல் ₹28 வரை உயரும் என்று பரவி வரும் சில செய்திகளை மத்திய பெட்ரோலிய அமைச்சகம் மறுத்துள்ளது.

இருப்பினும், மாதந்தோறும் நடக்கும் வழக்கமான மாற்றங்க ளின்படி சிலிண்டர் விலையில் சிறிய அளவில் ஏற்றம் இருக்கக்கூடும் என்பதே தற்போதைய களநிலவரமாக உள்ளது.

**சிலிண்டர் புக்கிங் விதிகளில் மாற்றம்:**

ஏற்கனவே நகரங்களில் 25 நாட்களுக்கு ஒரு முறையும் கிராமப்புறங்களில் 45 நாட்களுக்கு ஒரு முறை தான் சிலிண்டர் புக்கிங் செய்ய முடியும் என்கிற விதி இருந்து வருகிறது. அதேபோல் சிலிண்டர் சப்ளையில் வெளிப்படை தன்மையை கொண்டு வர OTP அடிப்படையிலான டெலிவரி முறை 100% கட்டாயப்படுத்தப்பட உள்ளது.

ஒரே முகவரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட கேஸ் இணைப்புகள் இருந்தால் அவற்றை இணைக்க அல்லது ஒன்றை ரத்து செய்ய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. போலி இணைப்புகளை கண்டறிந்து நீக்கும் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. உஜ்வாலா திட்டப் பயனாளிகள் மற்றும் மானியம் பெறுவோர் ஆதார் அடிப்படையில் செய்திருக்க வேண்டியது அவசியம். எரிவாயு கள்ளச்சந்தையைக் கட்டுப்படுத்துவதும், மானியங்களும் சிலிண்டர்களும் சரியான வாடிக்கையாளர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதும் இந்த மாற்றங்களின் முக்கிய நோக்கமாகும்.

**சிங்கார சென்னை அட்டை :**

சிங்கார சென்னை அட்டை என்பது சென்னை மெட்ரோ ரெயில் மற்றும் மாநகரப் பேருந்துகளில் தடையற்ற, ரொக்கமற்ற பயணத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய பொது போக்குவரத்து அட்டை (NCMC) ஆகும். இது எஸ்பிஐ (SBI) உடன் இணைந்து வழங்கப்படுகிறது. இந்நிலையில், வரும் மே 1 முதல், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தனது பழைய பயண அட்டைகளை முழுமையாக நிறுத்திவிட்டு, சிங்கார சென்னை அட்டைக்கு மாறத் திட்டமிட்டுள்ளது.

இந்த மாற்றத்தின் மூலம், பயணிகள் இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் (மெட்ரோ, பேருந்து, புறநகர் ரெயில்) ஒரே அட்டையைப் பயன்படுத்தித் தடையற்ற பயணத்தை மேற்கொள்ள முடியும். எனவே வரும் மே 1–ம்தேதி முதல் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்யவும், மெட்ரோ வாகன நிறுத்தங்களை பயன்படுத்தவும், பயணிகள் தங்களது பழைய அட்டையில் மீதமுள்ள தொகையை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் செல்போன் செயலி மூலம் பெறப்படும் எஸ்.வி.பி.பாஸ் அல்லது தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு மாற்றி கொள்ளுமாறு மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

**ஆன்லைன் விளையாட்டுக்கு புதிய விதிமுறைகள்**

மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆன்லைன் விளையாட்டு தொடர்பான புதிய விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. இது வரும் மே 1–ம்தேதி முதல் அமலுக்கு வருகிறது. இதில் சூதாட்டம் இல்லாத சாதாரண விளையாட்டுகளுக்கு பதிவு அவசியமில்லை என கூறப்படுகிறது. இருப்பினும் 'இ–ஸ்போர்ட்ஸ்' விளையாட்டுக்களுக்கு கட்டாய பதிவு அவசியம். அரசு தன்னிச்சையாகவோ அல்லது தேவைப்படும் போதோ சில விளையாட்டுகளை கண்காணிக்க இந்த விதிகள் உதவும். பயனாளர் பாதுகாப்பு அம்சங்களும் இதில் உறுதி செய்யப்பட்டுள்ளன. இச்சட்டம் ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய வழிவகை செய்கிறது.

**SBI வங்கியில் 2 புது ரூல்ஸ் :**

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா (SBI), எஸ்பிஐ கிரெடிட் கார்டை (SBI Credit Card) பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு வரும் மே 1–தேதி முதல் சில முக்கியமான மாற்றங்கள் அமலுக்கு வரவுள்ளதாக அறிவித்துள்ளது.

BPCL SBI அட்டை கட்டண விலக்கு: BPCL SBI கிரெடிட் கார்டின் ரூ.499 வருடாந்திரக் கட்டணம், வரும் மே 1–ம்தேதி முதல் ஆண்டுச் செலவு ரூ.1 லட்சத்தை எட்டினால் மட்டுமே தள்ளுபடி செய்யப்படும்; இது முன்பு நிர்ணயிக்கப்பட்ட ரூ.50,000 என்ற வரம்பிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. சுருக்கமாக செல்வதென்றால், அதே கட்டண தள்ளுபடி பலனை பெற, வாடிக்கையாளர் இனிமேல் ஆண்டுக்கு இரு மடங்கு அதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கும்.

**தாமதக் கட்டண (Late Fee) திருத்தம்:** கிரெடிட் கார்டு நிலுவைத் தொகைக்கான அபராதக் கட்டண முறை மாற்றப்பட்டுள்ளது. ரூ.100 முதல் ரூ.500 வரையிலான நிலுவைக்கு ரூ.100 அபராதம் விதிக்கப்படும், மற்றும் ரூ.500 முதல் ரூ.1000 வரையிலான நிலுவைக்கு அபராதம் ரூ.400–லிருந்து ரூ.500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் உங்கள் நிலுவைத் தொகை ரூ.1,000–ஐ தாண்டினால், தாமதக் கட்டணங்களில் எந்த மாற்றமும் இருக்காது.

கடைசி தேதிக்குள் குறைந்தபட்ச நிலுவை தொகையையாவது செலுத்த தவறும் வாடிக்கையாளர்களுக்கு, தாமத கட்டணம் விதிக்கப்படும் என்றும் தொடர்ச்சியாக இரண்டு பில்லிங் சுழற்சிகளுக்கு இந்த குறைந்தபட்ச கட்டணத்தை வாடிக்கையாளர் செலுத்தத் தவறும்பட்சத்தில், கூடுதலாக ரூ.100 அபராதம் சேர்க்கப்படும் என்று கூறியுள்ளது. அது மட்டுமின்றி நீங்கள் நிலுவை தொகையை செலுத்தும் வரை ஒவ்வொரு மாதமும் இந்த கூடுதல் தாமத கட்டணம் தொடரும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பரிசுப் புள்ளிகள் காலாவதியாதல்: 'கேஷ்பேக்' (Cashback) சலுகைகள் மூலம் பெறப்படும் பரிசுப் புள்ளிகள், அந்தத் தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்ட 90 நாட்களுக்குள்ளும்; 'உடனடித் தள்ளுபடி' (Instant Discount) சலுகைகள் மூலம் பெறப்படும் புள்ளிகள் 120 நாட்களுக்குள்ளும் காலாவதியாகிவிடும்.

**HDFC வங்கி SMS கட்டணம் :**

HDFC வங்கி தனது SMS சேவைகளுக்கான புதிய கட்டணங்களை மே 1–ம்தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. வங்கி பரிவர்த்தனைகளின் பொழுது பாதுகாப்பு கருதி வாடிக்கையாளர்களின் மொபைல் எண்ணிற்கு SMS அனுப்பப்பட்டிருக்கிறது.

தற்போது ஒரு குறுஞ்செய்திக்கு 20 காசுகளுடன் GST வசூலிக்கப்பட்டு வரும் நிலையில் இதனை வரும் மே 1 முதல் ஒரு SMS–க்கு 15 காசுகளாக குறைக்கப்பட உள்ளது.

அதேபோல் மாதம் 100 SMS அலர்ட்டுகளுக்கு இதுவரை ரூ.20+ GSTயும் செலுத்தியந்த நிலையில் இனிவரும் காலங்களில் அது 15 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. அதே சமயம் மின்னஞ்சல் மூலம் பெறப்படும் அலர்ட்டுகளுக்கு கட்டணம் கிடையாது என்றும், அது முற்றிலும் இலவசமாக இருக்கும் என்றும் HDFC வங்கி தெளிவுபடுத்தியுள்ளது.

**வங்கிப் பரிவர்த்தனைகளில் மாற்றம் :**

வரும் மே 1–ம்தேதி முதல் ஒவ்வொரு டிஜிட்டல் பரிவர்த்தனையும் அதிகப் பாதுகாப்பாக இருப்பதற்காக இரு காரணி அங்கீகாரம் (2FA) கடுமையாகச் செயல்படுத்தப்படவிருக்கிறது. அதாவது, யூபிஐ, நெட் பேங்கிங் அல்லது கார்டு மூலம் பணம் செலுத்தும் போது OTP நம்பர், PIN நம்பர் அல்லது பயோமெட்ரிக் சரிபார்ப்பை மீண்டும் செய்ய வேண்டியிருக்கும். கார்டு இல்லாத பணப் பரிவர்த்தனைகள் இனி இலவசப் பரிவர்த்தனை வரம்பில் கணக்கிடப்படும். இந்த வரம்பை மீறினால் 17 ரூபாய் முதல் 21 ரூபாய் வரை கட்டணம் விதிக்கப்படும்.

**பான் கார்டு விதிமுறைகள்:**

அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகள் மீதான தனது கண்காணிப்பை அரசு இப்போது கடுமையாக்குகிறது. ஒரு நிதியாண்டில் ரூ.10 லட்சத்திற்கு மேல் பணம் டெபாசிட் செய்யும் அல்லது எடுக்கும் நபர்களுக்கு பான் எண் வழங்குவது கட்டாயமாக்கப்படும். முன்னதாக, இந்த வரம்பு தினசரி அடிப்படையில் கண்காணிக்கப்பட்ட நிலையில் இப்போது ஆண்டுதோறும் கண்காணிக்கப்படும்.

**EPFO விதிகளில் புதிய மாற்றம் :**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமான EPFO மே மாதம் முதல் புதிய நடைமுறைகளை அமல்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது PF கணக்கு வைத்திருப்பவர்கள் தங்கள் PF பணத்தை எடுக்க ஆன்லைனில் விண்ணப்பித்து மாத கணக்கில் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

## கொச்சி-தூத்துக்குடி: இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்துக்கு அனுமதி; வீடுகளுக்கு தடையின்றி கியாஸ் கிடைக்கும்!

நாகர்கோவில், ஏப் 30–

ஈரான்–அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதலால் ஹார்முஸ் நீர்சந்தி மூடப்பட்டது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வினியோக சங்கிலி அறுந்தது. இதன் தாக்கம் எங்கோ இருக்கும் நாடுகளை தாண்டி இந்தியாவின் குக்கிராமத்து அடுப்பங்கரை வரை எதிரொலித்தது. சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட பாதிப்புகள் ஏராளம். வீட்டு தேவையை அரசு பூர்த்தி செய்து விட்டது. ஆனால் வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஒரு சிலிண்டரை ரூ.7,000 கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு உணவக உரிமையாளர்கள் தள்ளப்பட்டனர். இந்த இக்கட்டான நிலையை புரிந்துகொண்ட மத்திய அரசு, மக்கள் இயற்கை எரிவாயுவுக்கு (பி.என்.ஜி.) மாற வேண்டும் என அறிவுறுத்தியது.

ஆனால் தற்போது நாட்டின் பெருநகரங்களில் மட்டுமே இந்த வசதி உள்ளது. எனவே இதை விரிவுபடுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம், இந்திய ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்துக்கு ஒரு முக்கிய அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அதாவது கொச்சியில் தொடங்கி கன்னியாகுமரி மாவட்டம் வழியாக தூத்துக்குடி வரை இயற்கை எரிவாயு (மீத்தேன்) குழாய்களை அமைக்கவும், அவற்றை இயக்கவும் அனு மதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் கே.டி.பி.எல். (கொச்சி– கன்னியாகுமரி– தூத்துக்குடி குழாய்) என்று அழைக்கப்படுகிறது. இதற்கான ஏலம் முடிந்து, கடந்த மார்ச் 9–ம் தேதி அங்கீகார கடிதம் வழங்கப்ப ட்டது. மார்ச் 19–ம் தேதி இந்திய ஆயில் கார்ப்பரேஷன் தனது ஏற்பு கடிதத்தை சமர்ப்பித்தது. இந்த திட்டத்தின் கீழ் குழாய் இணைப்பானது கொச்சி எல்.என்.ஜி. முனையத்தில் இருந்து தூத்துக்குடி வரை மொத்தம் 424.65 கி.மீ. தூரம் அமைக்கப்படும். ஒவ்வொரு பகுதியின் மண் தன்மைக்கு ஏற்ப 16, 14, 12.75 மற்றும் 8.625 அங்குல விட்டம் கொண்ட குழாய்கள் பதிக்கப்படும். நாள் ஒன்றுக்கு 68.40 லட்சம் மெட்ரிக் ஸ்டாண்டர்ட் கியூபிக் மீட்டர் எரிவாயு வழங்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது. தொழிற்சாலைகளுக்கான எரிபொருள் மற்றும் வீடுகளுக்கான கியாஸ் இதன் மூலம் தடையின்றி கிடைக்கும். இந்த ஒப்பந்தத்தில் இந்திய ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் முதன்மை பொது மேலாளர் யோஹான்கு மார் மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்கு முறை வாரியம் சார்பில் செய லாளர் அஞ்சன்கு மார்மிஸ்ரா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020